## ஏப்ரல் - 22 - சனி

### புனித அசிசி அக்னஸ்

**"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்.16:15)**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 4:13 – 21

அக்காலத்தில் பேதுருவும் யோவானும் கல்வியறிவற்றவர்கள் என்பதைத் தலைமைச் சங்கத்தார் அறிந்திருந்ததால், அவர்களது துணிவைக் கண்டு வியப்படைந்தனர் அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதையும் உணர்ந்து கொண்டனர்.நலம் பெற்ற மனிதர் அவர்களோடு நிற்பதைக் கண்டதால் அவர்களால் ஒன்றும் மறுத்துப் பேச முடியவில்லை.எனவே அவர்கள் பேதுருவையும் யோவானையும் சங்கத்தைவிட்டு வெளியேறும்படி ஆணையிட்டு, பின்பு தங்களுக்குள் இது குறித்துக் கலந்து பேசினார்கள்."நாம் இந்த மனிதர்களை என்ன செய்யலாம்? ஏனென்றால் குறிப்பிடத்தக்க ஓர் அரும் அடையாளத்தை இவர்கள் செய்துள்ளார்கள் இது எருசலேமில் வாழும் அனைவருக்கும் தெரியும். இதை நாம் மறுக்க முடியாது.ஆகவே இச்செய்தி மேலும் மக்களிடையே பரவாமலிருக்குமாறு இந்த இயேசுவைக் குறித்து யாரிடமும் பேசக் கூடாதென நாம் இவர்களை அச்சுறுத்தி வைப்போம்" என்று கூறினார்கள்.அதன் பின்பு தலைமைச் சங்கத்தார் அவர்களை அழைத்து, "இயேசுவைப் பற்றி எதுவும் பேசவோ, கற்பிக்கவோ கூடாது" என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டனர்.அதற்குப் பேதுருவும் யோவானும் மறுமொழியாக, "உங்களுக்குச் செவிசாய்ப்பதா? கடவுளுக்குச் செவிசாய்ப்பதா? இதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்இ என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" என்றனர்.அவர்களைத் தண்டிப்பதற்கு வேறு வழி கண்டுபிடிக்க முடியாததாலும், மக்களுக்கு அஞ்சியதாலும் தலைமைச் சங்கத்தார் அவர்களை மீண்டும் அச்சுறுத்தி விடுதலை செய்தனர். ஏனென்றால் நடந்ததைக் குறித்து மக்கள் அனைவரும் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் மன்றாட்டை நீர் கேட்டதால் நான் நன்றி செலுத்துகிறேன்

## நற்செய்தி : மாற்கு 16 : 9 - 15

வாரத்தின் முதல் நாள் காலையில் இயேசு உயிர்த்தெழுந்தபின்பு அவர் முதலில் மகதலா மரியாவுக்குத் தோன்றினார். அவரிடமிருந்துதான் அவர் ஏழு பேய்களை ஓட்டியிருந்தார்.மரியா புறப்பட்டுச் சென்று இயேசுவோடு இருந்தவர்களிடம் இதை அறிவித்தார். அவர்கள் துயருற்று அழுதுகொண்டிருந்தார்கள்.அவர் உயிரோடு இருக்கிறார் என்றும் மரியா அவரைக் கண்டார் என்றும் கேட்டபோது அவர்கள் நம்பவில்லை.அதன்பிறகு அவர்களுள் இருவர் வயல்வெளிக்கு நடந்து சென்றபோது இயேசு அவர்களுக்கு வேற்று உருவில் தோன்றினார்.அவர்கள் சென்று அதனை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள் அவர்கள் சொன்னதையும் சீடர்கள் நம்பவில்லை.இறுதியாகப் பதினொருவரும் பந்தியில் அமர்ந்திருந்தபொழுது அவர்களுக்கு இயேசு தோன்றினார். உயிருடன் எழுப்பப்பட்ட தம்மைக் கண்டவர்கள் சொன்னதை நம்பாமல் அவர்கள் கடின உள்ளத்தோடு இருந்தமையால் அவர் அவர்களுடைய நம்பிக்கையின்மையைக் கண்டித்தார்.இயேசு அவர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள" என்றார்.

**தியானம்:** "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" என்ற இயேசுவின் வாக்குறுதியைப் பெற்ற சீடர்கள் இயேசுவோடு தாங்கள் பெற்ற இறை அனுபவத்தை உலகிற்கு எடுத்துச் சொல்ல விரைகின்றார்கள். ஆனால் இருளின் ஆதிக்கத்திற்கு ஆளான ஆளும் வர்க்கத்தினர் இந்த உண்மையை ஏற்க மறுக்கின்றனர். ஏனெனில் அவர்கள் இறைவார்த்தையை கேட்க மறுக்கும் செவியும், ஏற்க மறுக்கும் உள்ளமும் கொண்டவர்களாய், எப்போதும் தூய ஆவியாரை எதிர்த்தனர், (தி.பணி7:51). மேலும் இயேசுவைப் பற்றி எடுத்துச் சொல்லக்கூடாது என்று திருத்தூதர்களை நையப்புடைத்தனர் (திபணி5:40). ஆனால் பேதுரு "வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுபோட்டீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்" (திபணி3:15) என்று தைரியத்தோடு எல்லோர் முன்னிலையிலும் பறைசாற்றுகின்றார். இயேசுவின் இறப்புக்குப் பின்னால் அஞ்சி நடுங்கி கதவுகளுக்குப் பின்னால் தங்களை மறைத்துக் கொண்ட சீடர்களுக்கு எங்கிருந்து வந்தது இந்தத் தைரியம்? இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது சிதறி ஓடிய சீடர்கள், மறுதலித்த சீடருக்கு எப்படி இந்த தைரியம்? கல்வியறிவற்ற, பண்பாடற்ற, வலுவற்ற சீடர்களின் வாழ்வில் அளப்பெரிய மாற்றம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? என்ற வினாக்களுக்கு விடையாக நமக்குக் கிடைப்பது "அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள்" என்பது தான். இயேசுவோடு இருப்பது என்பது உடலளவில் அவரோடு இருப்பது அல்ல உள்ளார்ந்த விதத்தில் அவருடைய உணர்வுகளோடு, ஆன்மாவோடு சங்கமிப்பது. அதோடு கூட உயிர்த்த ஆண்டவர் அருளிய உன்னதத்தின் ஆவியின் ஆற்றல் அவர்களை சரித்திரத்தை மாற்றிப்போடும் அசாதாரண மனிதர்களாக மாற்றியது. "தூய ஆவி உங்களிடம் வரும் போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.பணி1:8) உலகத்தின் விழுமியங்களுக்கு மாறாக இயேசுவின் உயிர்ப்பின் சாட்சிகளாய் வாழ நாம் இயேசுவோடு இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நற்கருணை ஆண்டவர் சந்திப்பு, செப வாழ்வு இவற்றின் மூலம் நாம் இயேசுவோடு நமது உடனிருப்பை வலுப்படுத்தலாம் அத்தோடு தூய ஆவியின் வல்லமை நம்மீது பொழியப்பட நாம் தாகத்தோடு உயிர்த்த ஆண்டவரிடம் கேட்க வேண்டும். "தாகமுற்ற நிலத்தில் தண்ணீரை ஊற்றுவேன்" என்று (எசா.44:3) எசாயா புத்தகத்தில் வாசிப்பது போல நாம் தூய ஆவியானவருக்காக தாகத்தோடு காத்திருந்து செபிக்கும் போது நமக்கு தூய ஆவியின் வல்லமை, அபிஷேகம் கிடைக்கும். பின்னர் நாமும் தூய ஆவியின் ஆற்றலோடு இயேசுவின் உயிர்ப்புக்கு உயிருள்ள சாட்சிகளாக இந்த உலகத்தில் வலம் வருவோம்.